# ஜெயங்கொண்டம் நகராட்சி



## 2023-2024 ஆம் ஆண்டின்

## நிர்வாக அறிக்கை

# ஜெயங்கொண்டம் நகராட்சி
# நிர்வாக அறிக்கை
# 2023-2024

# அமைப்பும் நிர்வாகமும்

ஜெயங்கொண்டம் நகராட்சி பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.3603/2022 சி-1 நாள்.18.06.2004 ன் படி தேர்வு நிலை பேரூராட்சியிலிருந்து தரம் உயர்த்தப்பட்டு 18.06.2004 முதல் 3 ஆம் நிலை நகராட்சியாகவும் , அரசாணை (நிலை) எண்.154 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:09.08.2010ன் படி இரண்டாம் நிலை நகராட்சியாகவும் மற்றும் தற்போது நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை அரசாணை நிலை எண்.57 நாள்.02.05.2023 முதல் முதல் நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது.

2011 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின் படி மொத்த மக்கள் தொகை :

| | | |
|---|---|---|
| • நகரப்பரப்பளவு | : | 28.49 ச.கி.மீ |
| • 2011 ன் படி மக்கள் தொகை | : | 33945 |
| • நகர்மன்ற உறுப்பினர் எண்ணிக்கை | : | 21 |
| • நகராட்சியின் நிலை | : | முதல் நிலை நகராட்சி |

1. மன்றம் :

1991 ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி இந்நகராட்சியின் மக்கள் தொகை 28277 ம் மற்றும் 2001 ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி 31268 ஆகும். இதனடிப்படையில் அரசாணை நிலை எண்.154, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.18.06.2004ல் இந்நகராட்சியின் நகர்மன்ற உறுப்பினர் வார்டுகளின் எண்ணிக்கை 21 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

அரசு ஆணை எண்.135 மற்றும் 136ன் படி நகராட்சி பகுதி 21 வார்டுகளாக பிரிக்கப்பட்டு 15.10.2006 ல் நகர்மன்ற தேர்தல் நடத்தப்பட்டது. அக்டோபர் 2016ல் உள்ளாட்சி மன்ற காலம் முடிவுற்றதும், உள்ளாட்சி மன்ற தேர்தல் நடைபெறாத நிலையில் அரசாணை எண்.30 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.24.10.2016 ன்படி ஆணையர் தனி அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார். தமிழ அரசால் நிர்ணயிக்கப்பட்ட மறுவரையறை ஆணைய D.C.order No.1/2017/TNDC/EG-1 நாள்.12.09.2017ன் படி உள்ளாட்சிகளின் தற்போதைய வார்டுகளை மறுவரையறை செய்திட தெரிவிக்கப்பட்டதின் பேரில் ஏற்கனவே உள்ள இந்நகராட்சியின் 21 வார்டுகளும் கீழ்குறிப்பிட்டவாறு மறுவரையறை செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | பெண்கள் பொது (Women General) | 9 |
| 2. | பெண்கள் ஆதிதிராவிடர் (Women S.C) | 2 |
| 3. | ஆதி திராவிடர் பொது (S.C General) | 2 |
| 4. | பொது (General) | 8 |

மறுவரையறை செய்யப்பட்ட வார்டுகள் இறுதி செய்து மறுவரையறை செய்யப்பட்டுள்ளது.

2 நகராட்சி தேர்தல் :

உள்ளாட்சி தேர்தல் நடைபெறாத நிலையில் அரசாணை எண்.30 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.24.10.2016 ன்படி நகராட்சி ஆணையரையே தனி அலுவலராக நியமிக்கப்பட்டதால் ஆணையர் அவர்கள் தனி அலுவலராக பொறுப்பேற்று அக்டோபர் 2016 முதல் தனி அலுவலர் பணிபுரிந்து வந்தார். தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் அறிவிக்கையின்படி 19.02.2022 நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் வாக்கு எண்ணிக்கை நடைப்பெற்று 22.02.2022 அன்று முடிவுகள் வெளிடப்பட்டது. அதன்படி 02.03.2022 அன்று 21 வார்டு உறுப்பினர்களும் நகர்மன்ற உறுப்பினராக பதவியேற்று கொண்டனர். பெருபான்மையான நகர்மன்ற உறுப்பினர்களால் திருமதி.சி.சுமதி சிவக்குமார் நகர்மன்ற தலைவராகவும் மற்றும் திரு.வெ.கொ.கருணாநிதி நகர்மன்ற துணைத்

தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு 04.03.2022 அன்று பொறுப்பேற்று கொண்டார்கள்.

**3.ஆணையர் :**

இந்நகராட்சியின் ஆணையராக திரு.சு.மூர்த்தி அவர்கள் 31.05.2023 வரையிலும் , திரு.V.குமார் அவர்கள் 23.07.2023 வரையிலும், 24.07.2023 முதல் திரு.ஆர்.அசோக்குமார் அவர்கள் அறிக்கையாண்டில் தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

**4.நகராட்சி பொறியாளர் :**

இந்நகராட்சியில் திரு.D.இராஜகோபாலன் அவர்கள் நகராட்சி பொறியாளராக அறிக்கை ஆண்டில் தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

**5.நிர்வாகம் ( பொதுப்பிரிவு ) :**

**எல்லை :**

இந்நகராட்சி கீழ்காணும் வருவாய் கிராமங்களை உள்ளடக்கி 28.49 சதுர கீலோ மீட்டர் பரப்பளவை கொண்டது.

| வரிசை எண் | வருவாய் கிராம எண் | வருவாய் கிராமத்தின் பெயர் |
|---|---|---|
| 1. | 46 | ஜெயங்கொண்டம் |
| 2. | 45 | அங்கராயநல்லூர் (மேற்கு) |
| 3. | 30 | கல்லாத்தூர் (பகுதி) |
| 4. | 31 | பிராஞ்சேரி (பகுதி) |
| 5. | 43 | மணக்கரை (பகுதி) |

நிர்வாகப் பிரிவில் 31.03.2024 முடிய அறிக்கையாண்டில் பணியாற்றிய அலுவலர்கள் விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

<u>பொது பிரிவு</u>

| வ.எண் | பணியிட விபரம் | மொத்த பணியிடங்கள் | பணியில் உள்ளவர் எண்ணிக்கை | காலியிடம் |
|---|---|---|---|---|
| 1. | மேலாளர் | 1 | 1 | – |
| 2. | கணக்கர் | 1 | 1 | – |
| 3. | வருவாய் ஆய்வாளர் | 1 | 1 | – |
| 4. | உதவியாளர் | 2 | 2 | – |
| 5. | இளநிலை உதவியாளர் | 7 | 4 | 3 |
| 6 | புள்ளி விபரக்குறிப்பாளர் | 1 | 1 | – |
| 7. | தட்டச்சர் | 2 | – | 2 |
| 8. | பதிவறை எழுத்தர் | 1 | 1 | – |
| 10. | அலுவலக உதவியாளர் | 3 | 3 | – |
| கூடுதல் | | 19 | 14 | 5 |

## பொறியியல் பிரிவு

| வ எண் | பணியிடங்கள் விபரம் | மொத்த பணியிடங்கள் | அறிக்கை ஆண்டில் பணிபுரிபவர்கள் | காலி பணியிடங்கள் |
|---|---|---|---|---|
| 1 | பொறியாளர் | 1 | 1 | - |
| 2 | பொதுப்பணி மேற்பார்வையாளர் | 1 | 1 | - |
| 3 | பணி ஆய்வர் | 3 | - | 3 |
| 4 | மின்பணியாளர் | 1 | 1 | - |
| 5 | மின்பணி உதவியாளர்கள் | 2 | 1 | 1 |
| 6 | பிட்டர் | 1 | 1 | 0 |
| 7 | மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குபவர் மற்றும் காவலர் | 10 | 8 | 2 |
| 8 | ஓட்டுநர் | 1 | 1 | - |
| 9 | வாரச்சந்தை காவலர் | 1 | - | 1 |
| கூடுதல் | | 21 | 14 | 7 |

## நகரமைப்பு பிரிவு

| வ எண் | பணியிடங்கள் விபரம் | மொத்த பணியிடங்கள் | அறிக்கை ஆண்டில் பணிபுரிபவர்கள் | காலி பணியிடங்கள் |
|---|---|---|---|---|
| 1 | நகரமைப்பு அலுவலர் | 1 | 1 | - |
| 2 | நகரமைப்பு ஆய்வர் | 1 | 1 | - |
| கூடுதல் | | 2 | 2 | - |

## வருவாய் பிரிவு

| வ எண் | பணியிடங்கள் விபரம் | மொத்த பணியிடங்கள் | அறிக்கை ஆண்டில் பணிபுரிபவர்கள் | காலி பணியிடங்கள் |
|---|---|---|---|---|
| 1 | வருவாய் ஆய்வர் | 1 | 1 | - |
| 2 | வருவாய் உதவியாளர்கள் | 5 | 5 | - |
| கூடுதல் | | 6 | 6 | - |

## பொதுசுகாதார பிரிவு

| வ எண் | பணியிடங்கள் விபரம் | மொத்த பணியிடங்கள் | அறிக்கை ஆண்டில் பணிபுரிபவர்கள் | காலி பணியிடங்கள் |
|---|---|---|---|---|
| 1 | சுகாதார அலுவலர் | 1 | 0 | 1 |
| 2 | சுகாதார ஆய்வர் | 2 | 1 | 1 |
| 3 | துப்புரவு மேற்பார்வையாளர் | 5 | 5 | - |
| 4 | துப்புரவு பணியாளர்கள் | 25 | 16 | 9 |
| கூடுதல் | | 33 | 22 | 11 |
| மொத்த கூடுதல் | | 81 | 58 | 23 |

## 6. கூட்டங்கள்:–

2023–2024ம் ஆண்டு நடைபெற்ற நகரமன்ற கூட்டத்தின் விவரங்கள் கீழ்கண்டவாறு:–

| வ எண் | கூட்டம் நடைபெற்ற தேதி | நகரமன்ற கூட்ட விபரம் | மன்ற பொருள்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|
| | | | சாதாரண கூட்டம் | அவசர கூட்டம் | சிறப்பு கூட்டம் |
| இந்நகராட்சி நகர்மன்ற தலைவர்அவர்களால் நடைபெற்ற நகர்மன்ற கூட்டத்தின் விவரம் | | | | | |
| 1. | 13.04.2023 | அவசரக் கூட்டம் | – | 1 | – |
| 2. | 21.04.2023 | அவசரக் கூட்டம் | – | 21 | – |
| 3. | 23.06.2023 | சாதாரணக் கூட்டம் | 19 | – | – |
| 4. | 29.08.2023 | சாதாரணக் கூட்டம் | 53 | – | – |
| 5. | 29.09.2022 | அவசரக் கூட்டம் | – | 1 | – |
| 6. | 01.12.2023 | சாதாரணக் கூட்டம் | 46 | – | – |

**<u>2023 – 2024</u>**

1) சாதாரண கூட்டம் – **3** முறை நடைபெற்றது. அதில் **118** பொருள் வைக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2) அவசரக்கூட்டம் – **3** முறை நடைபெற்றது. அதில் **23** பொருள் வைக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## 7. பொறியியல் பிரிவு

பொறியியல் பிரிவில் **01.04.2023** முதல் **31.03.2024** முடியதிரு.த. ராஜகோபாலன் ஆகியவர்கள் நகராட்சிப் பொறியாளராக பணிபுரிந்துள்ளார்கள்.

**01.04.2023** முதல் **31.03.2024** முடிய திரு.செ.பூபதி ஆகியவர்கள் பொதுப்பணி மேற்பார்வையாளராக பணிபுரிந்துள்ளார்கள்.

இப்பிரிவில் கீழ்க்கண்ட பணியாளர்கள் பணிபுரிகிறார்கள்.

1. மின் பணியாளர் – 1
2. மின் பணி உதவியாளர் – 1
3. குழாய் பொருத்துனர் – 1
4. குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குபவர் – 8

மேலும் இப்பிரிவில் கீழ்க்கண்ட பணியிடங்கள் காலியாக உள்ளன.

1. உதவி பொறியாளர் – 1
2. பொதுப்பணி மேற்பார்வையாளர் – 1
3. பணி ஆய்வர் – 3
4. பட வரைவாளர் – 1
5. மின் பணியாளர் – 0
6. மின் பணி உதவியாளர் – 0
7. குடிநீர் உதவியாளர் – 0
8. குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குபவர் – 0
9. குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி காவலர் – 0
10. வாரச்சந்தை காவலர் – 0

## 8. சாலைகள் விபரம்

| வ எண் | சாலைகளின் தன்மை | கிலோ மீட்டர் |
|---|---|---|
| 1 | சிமெண்ட் சாலைகள் | 10.424 |
| 2 | தார் சாலைகள் | 78.172 |
| 3 | பேவர் பிளாக் | 3.759 |
| 4 | மண் சாலைகள் | 18.613 |
| மொத்தம் | | 110.968 |

## 9. திட்டப் பணிகளின் விவரங்கள்

### 1. கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2023-24

அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் நகராட்சியில் 2023–24 ஆம் ஆண்டில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தில் பின்வரும் பணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது தற்சமயம் பணிகள் முடிவுற்று மற்றும் பணிகள் நடைபெற்று வருகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| | **கலைஞர் நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் – 2023–24** | |
| 1. | 091011R445 செங்குந்தபுரம் 1வது குறுக்கு தெரு,091001R472 செங்குந்தபுரம் வடக்கு, 091001R476 பாரதி நகர்,091011R453 செங்குந்தபுரம் 7வது குறுக்கு தெரு,091011R448 செங்குந்தபுரம் 5வது குறுக்கு தெரு,091004R053 நரிக்குறவர் காலனி,091017R119 சின்னவளையம் 2வது குடியானத் தெரு 1 வது குறுக்கு,091020R365 சோழியன் தெரு,091005R060 மலங்கன்குடியிருப்பு குடியானத் தெரு 5 வது குறுக்கு,091005R062 மலங்கன்குடியிருப்பு குடியானத் தெரு 12 வது குறுக்கு,091005R065 மலங்கன்குடியிருப்பு இருளர் 1 வது தெரு,091015R189 சிதம்பரம் சாலை மேற்கு 1வது குறுக்கு,091001R465 செல்வபுரம் 3 வது தெரு,091020R377 கரடிகுளம் மெயின் ரோடு,091003R001 கொம்மேடு கீழ தெற்கு தெரு,–(15 எண்ணிக்கை ) ஆகிய பகுதிகளில் தார்சாலை அமைக்கும் பணி | **181.00** |
| 2 | 091015R188 ஏரிக்கரை தெரு,091014R314 விசாலாட்சி நகர் (R/S-6),091014R301 விசாலாட்சி நகர்,091014R312 விசாலாட்சி நகர் (R/S-5),091012R379 1வது குறுக்கு சாலை ,091018R150 ஜெ. ஜெ. நகர் 3 வது குறுக்கு சாலை,091016R162 சீனிவாச நகர் 1 ஏ குறுக்கு தரு, 091021R344 வேலாயுத நகர்10 வது குறுக்கு (X) சாலை.091006R101 சின்னவளையம் ஹரிஜன் தெரு 11 வது குறுக்கு,091014R285 கணபதி நகர் (R/S-3),091016R168 சீனிவாச நகர் 3ஏ குறுக்கு தெரு,091016R160 சீனிவாச நகர் 7வது குறுக்கு தெரு ,091001R479 நீதிபதி வீடு, 091012R433 மயானம் சாலை –(14எண்ணிக்கை ) ஆகிய பகுதிகளில் தார்சாலை அமைக்கும் பணி | **159.00** |
| 3 | அம்பேத்கார் நகர் பிச்சனேரி சாலை(091009R222) மற்றும் அம்பேத்கார் நகர் புதுகாலனி 1வது குறுக்கு (091009R222) ஆகிய பகுதிகளில் சிமெண்ட் சாலை மேம்பாடு செய்தல் | **10.00** |
| | **கூடுதல்** | **350.00** |

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| | **கலைஞர் நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் – 2023–24** | |
| 1. | வார்டு எண்.09 சர்வே.எண் 211/1A, 1B & 3B புதிய பேருந்து நிலையம் மேம்பாட்டு செய்யும் பணியின் | **215.00** |
| 2 | வார்டு எண்.14 சர்வே.எண்.212/1 ஆவேரி ஏரியை மேம்பாடு செய்தல். | **125.00** |

## 2. நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் (KNMT) 2023-24

அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் நகராட்சியில் 2023–24 ஆம் ஆண்டில் நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டத்தில் பின்வரும் பணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது தற்சமயம் பணிகள் முடிவுற்றது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| | நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் – 2023–24 | |
| 1. | 091003R017 ஒத்த தெரு, 091003R005 கொம்மேடு மெயின் தெரு,091004R031 புது தெரு,91004R026 கீழக்குடியிருப்பு ரோட்டுத் தெரு,091004R041 விருத்தாசலம் சாலை 3வது தெரு,091004R046 நாடார் காலனி 1வது குறுக்கு,091004R042 விருத்தாசலம் சாலை 4வது தெரு.091004R039 விருத்தாசலம் சாலை 1வது தெரு.091006R110 சின்னவளையம் மாரியம்மன்கோவில் தெரு 3வது குறுக்கு. 091017R118 சின்னவளையம் 2வது குடி யானத் தெரு. 091018R141 மாரியம்மன்கோவில் தெரு.091016R173 இந்திரா நகர் 2வது குறுக்கு.091016R159 சீனிவாச நகர் 7வது குறுக்கு 091015R187 அய்யனார் கோவில் தெரு,091015R191 நேரு நகர்.–(15 எண்ணிக்கை ) ஆகிய பகுதிகளில் தார்சாலை மேம்பாடு செய்தல் | 140.00 |
| 2 | 091008R204 நாச்சியார் அம்மன் கோவில் தெரு 1வது குறுக்கு.091008R205 நாச்சியார் அம்மன் கோவில் தெரு 2வது குறுக்கு 091009R206 அம்பேத்கார் தெரு,091002R246 மாரியம்மன் கோவில் தெரு 2வது குறுக்கு ,091010R260 காமராஜபுரம்,091010R250 அண்ணா நகர் 1வது மெயின் ரோடு ,091010R255 தகன மேடை சாலை , 091014R302 விசாலாட்சி நகர் (R/S-3) ,091021R334 வேலாயுத நகர் 5 வது குறுக்கு சாலை ,091012R409 தொழில்நுட்ப கல்லூரி 1வது குறுக்கு சாலை ,091011R443 செங்குந்தபுரம் 2 வது குறுக்கு தெரு ,091011R446 செங்குந்தபுரம் 5 வது குறுக்கு தெரு ,091011R441 செங்குந்தபுரம் 3 வது குறுக்கு தெரு – (13 எண்ணிக்கை) ஆகிய பகுதிகளில் தார்சாலை மேம்பாடு செய்தல் | 112.00 |
| 3 | 091003R015 கீழக்குடியிருப்பு மேல தெரு குறுக்கு–2.091003R016 காமன் கோவில் தெரு.091004R027 கீழக்குடியிருப்பு ரோட்டுத் தெரு.091006R103 சின்னவளையம் 2வது குறுக்கு தெரு.091006R106 சின்னவளையம் ஹரிஜன் தெரு 5 வது குறுக்கு 091006R099 சின்னவளையம் ஹரிஜன் தெரு 8 வது குறுக்கு, 091006R098 சின்னவளையம் ஹரிஜன் தெரு 7 வது குறுக்கு,091006R090 சின்னவளையம் முதலியார் தெரு 2 வது குறுக்கு,091006R104 சின்னவளையம் முதலியார் தெரு 3 வது குறுக்கு,091017R114 சின்னவளையம் மாரியம்மன்கோவில் தெரு 1 வது குறுக்கு.091017R137 பாப்பாங்குளம் 8 வது குறுக்கு தெரு.,091017R116 சின்னவளையம் குடியானத் தெரு 3 வது குறுக்கு.,091009R208 அம்பேத்கர் நகர் 2வது குறுக்கு தெரு,091009R223 காந்தி நகர் 1 வது மெயின் ரோடு.091009R249 கொம்மேடு | 168.00 |

| | | |
|---|---|---|
| | சாலை,091013R317 சன்னதி தெரு மெயின்.091021R341 வேலாயுத நகர் 10 வது குறுக்கு சாலை,091020R376 கரடிகுளம் மெயின் சாலை,091020R374 இருளர் தெரு,091012R396 பாரதி சாலை,091011R439 செங்குந்தபுரம் 1 வது தெரு /091011R440 செங்குந்தபுரம் 2 வது தெரு ,091001R477 5A குறுக்கு தெரு–( 23 எண்ணிக்கை ) ஆகிய பகுதிகளில் தார்சாலை மேம்பாடு செய்தல் | |
| | கூடுதல் | **420.00** |

## 3. 15வது மத்திய நிதிக்குழு மான்யம் (15$^{TH}$ CFC 2023-24)

ஜெயங்கொண்டம் நகராட்சியில் 2023–24 ஆம் ஆண்டில் 15 வது மத்திய நிதிக்குழு மான்யத்தின் கீழ் கீழ்கண்டுள்ள பணிகள் எடுத்து கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற உள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| | 15வது மத்திய நிதிக்குழு மான்யம் – 2023–24 மற்றும் 2024–25 | |
| 1. | 091014R280 வார்டு.எண்.14 கணபதி நகர் மெயின் ரோடு, 091007R196 வார்டு.எண்.07 தேவாங்க முதலியார் தெருவில், 091002R232 வார்டு.எண்.02 சாத்தமடை மெயின், 091008S035 வார்டு.எண்.08 ஜீப்ளி ரோடு 1–வது குறுக்கு, 091017R130 வார்டு.எண்.17 பாப்பாங்குளம் 1–வது குறுக்குத் தெருவில், 091017R118 வார்டு.எண்.17 சின்னவளையம் 2–வது குடியானத் தெருவில், 091014R299 வார்டு.எண்.14 விசாலாட்சி நகர் மற்றும் பாலிடெக்னிக் 2–வது குறுக்கு சாலை தார்சாலை புதுப்பித்தல். | **79.00** |
| 2 | 091021R353 வார்டு.எண்.21 பொன்நகர் 2–வது மெயின் ரோடு, 091013R267 வார்டு.எண்.13 கொக்கனேரி சந்து தெரு, 091021S058 வார்டு.எண்.21 பழைய கண் மருத்துவமனை 2–வது குறுக்கு ரோடு, 091021R354 முரளி நகர், 091008R203 வார்டு.எண்.08 நாச்சியார் அம்மன் கோவில் தெரு, 091013R265 வார்டு.எண்.13 கொக்கனேரி தெரு, 091013R316 வார்டு.எண்.13 ஈஸ்வரன் கோவில் தெரு ,091013R318 வார்டு.எண்.13 சன்னதி குறுக்குத் தெரு, 091021S059 வார்டு.எண்.21 வேலாயுத நகர் 1–வது குறுக்கு ரோடு மற்றும்091002R245 மாரியம்மன் கோவில் தெரு தார்சாலை புதுப்பித்தல். | **87.00** |

## 13. தெரு விளக்கு பராமரிப்பு

இந்நகராட்சியால் 21 வார்டுகளிலும் பராமரிக்கப்பட்டு வந்த **1992** எண்ணிக்கையிலான தெருவிளக்குகளை தனியார் மூலம் பராமரித்திட M/s.சபரி எலக்ட்ரிக்கல்ஸ், சென்னை, நிறுவனத்தினருக்கு ESCO திட்டத்தின் கீழ் தெரு விளக்கு மின் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு, தினசரி நகராட்சி மின்பணியாளர் மூலம் அனைத்து மின் விளக்குகளும் **98%** செயல்பட்டு வருவதை உறுதி செய்து தினசரி கண்காணிக்கப்பட்டு வருகிறது.

## 14. பொது சுகாதாரம்.

1. துப்புரவு அலுவலர் – 1 (1 பணியிடம் காலியாக உள்ளது)
2. துப்புரவு ஆய்வர் – 2 1பணியிடம் காலியாக உள்ளது
3. துப்புரவு பணி மேற்பார்வையாளர் – 5
4. டிராக்டர் ஓட்டுநர் - 1
5. துப்புரவு பணியாளர் – 16

## 15. தூய்மை இந்தியா திட்டம் :-

திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2015 – 16 ன் கீழ் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ந.க.எண். 30319/P3/2015 நாள். 21/07/2015 ன் படி ரூ. 1024.10 லட்சம் நிதி ஒதுக்கீட்டில் ( SBM grant 20%, State Fund 7%, Specisal SWM fund 63% ULB Share 10%) கலவை உரக்கிடங்கு அமைக்கும் பணிக்கு உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| உரக்கிடங்கு | :: | 1 |
| பரப்பளவு | :: | 4.20.0 ஹெக்டேர் |
| தொலைவு | :: | 4.00 கி.மீ. |
| தினசரி சேகரம்ஆகும் கழிவுகளின் அளவு | :: | 11.96 மெட்ரிக் டன் |

## 16.திடக்கழிவு மேலாண்மை

இந்நகராட்சியில் 21 வார்டுகளில் வீடுகள் மற்றும் கடைகளில் குப்பைகளை மக்கும் மற்றும் மக்கா குப்பைகள் என தரம் பிரித்து சென்று சேகரிக்கும் பணி நடை பெற்று வருகிறது. சேகரிக்கப்படும் குப்பைகளை டாடா ஏசி மற்றும் டிப்பர் லாரிகள் மூலம் நகராட்சி உரக்கிடங்கிற்கு எடுத்து சென்று பிளாஸ்டிக் பொருட்கள் தனியாக பிரித்து எடுக்கப்பட்டு வருகிறது. விற்பனைக்கு இயலாத நெகிழிப் பொருட்கள் Ultratech நிறுவனத்திற்கு அனுப்பப்படுகின்றது.

## 17. கொசு ஒழிப்பு

ஒப்பந்த அடிப்படையில் கொசு ஒழிக்கும் பொருட்டு நகர் முழுவதும் புகையான் (Fogging Machine) மருந்து அடிக்கப்பட்டது. சாக்கடையின் மூலம் கொசு புழு உற்பத்தி ஆகாமல் தடுக்க சாக்கடைகள் சுத்தம் செய்யப்பட்டு தினசரி (Anti larval control Unit) பணி மூலம் மருந்து அடிக்கப்பட்டு வருகிறது. Anti larval Work – கால்வாய் துப்புரவு பணி சிறப்பாக செயல்பாட்டில் உள்ளது. இந்நகராட்சியில் டெங்கு காய்ச்சல் ஏற்படுவதை தடுக்க, பொது மக்கள் அறியும் வண்ணம் விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட்டது. பள்ளி மாணவர்களுக்கு நோயினால் ஏற்படும் விபரீதம் மற்றும் அதனை தடுக்கும் விதம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. துண்டு பிரசுரம் மூலம் பொது மக்களுக்கு விளம்பரம்

செய்யப்பட்டது. சிறப்பு களப்பணியாளர்கள் நியமித்து வீடுவீடாக சென்று கொசு உற்பத்தியாகும் உரல், தொட்டி, டயர், குளிர் சாதனபெட்டி போன்றவற்றில் உள்ள நீரை அப்புறப்படுத்தி நோய் பரவாமல் தடுக்கப்பட்டது. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 21 வார்டுகளிலும் 52 டெங்கு ஒழிப்பு பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படை மூலம் குடிநீர் தொட்டி, பானை போன்றவற்றில் டெமோபாஸ் மருந்து தெளிக்கப்பட்டு நோய் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

**18.பணியாளர் நலம்**

துப்புரவு ஊழியர்களுக்கு நடப்பு நிதியாண்டிற்கான சீருடைகள் கையுறை, காலுறை, முகவுரை மற்றும் மழை கோட்டு மற்றும் காலணிகள் வாங்கி வழங்கப்பட்டது. துப்புரவு பணியாளர்களுக்கு மருத்துவ முகாம் நடத்தி அவர்களின் உடல்நலம் சத்தான உணவு வகைகளும் வழங்கப்பட்டு வருகின்றது.

**19. சாக்கடை புதைச் சாக்கடை**

இந்நகராட்சியில் புதை சாக்கடை இல்லை. நகரில் உள்ள கழிவுநீர் சாக்கடை நீர் அப்புறப்படுத்தி கொசு மருந்து அடிக்கப்படுகிறது.

**20. ஆதி திராவிடர் நலம்**

ஆதி திராவிடர்/ பழங்குடியினர், ஈமச்சடங்கு தொகை நபர் ஒருவருக்கு ரூ.5000/- விகிதம் தொகை ரூ. 2,45,000/– 49 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**21. வணிக உரிமம்**

இந்த அறிக்கையாண்டில் தொழிற்சாலைகள், உணவு விடுதிகள், இதர வியாபாரங்கள் முதலியவற்றிற்கு உரிமம் வழங்கப்பட்டு நடப்பு ஆண்டில் ரூ.62129/- வசூல் செய்யப்பட்டுள்ளது. இத்தலைப்பின் கீழ் வழக்கு எதுவும் நிலுவையில் இல்லை. முந்தைய வழக்கும் எதுவும் நிலுவையில் இல்லை.

உணவு பாதுகாப்பு அலுவலர் மற்றும் துப்புரவு ஆய்வர் அவர்களின் ஆய்வின்போது நாள்பட்ட உணவு ஸ்டாக்குகள், கெட்டுப்போன உணவு பொருள்கள் மற்றும் நெகிழிப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு எரிக்கப்பட்டு புதைக்கப்பட்டது. உரிமம் இல்லாத உணவு பொருள்கள், லேபிள் இல்லாத உணவு பொருள்கள் விற்பனைக்கு தடை செய்யப்பட்டது.

**வருவாய் பிரிவு.**

வருவாய் உதவியாளர்கள் ஒரு வருவாய் ஆய்வரின் மேற்பார்வையில் தொடர்ந்து பணியாற்றி வந்துள்ளனர். இந்நகராட்சியில் 1 வருவாய் ஆய்வர் 5 வருவாய் உதவியாளர் பணியிடம் உள்ளது. அறிக்கையாண்டில் 5 வருவாய் உதவியாளர்களும் பணியாற்றியுள்ளார்கள்.

## 25.தொழில் வரி

| வ. எண் | 6 மாத சராசரி வருமானம் | ஏற்கனவே வசூலிக்கப்பட்ட தொழில்வரி தொகை(ரூ) | (25ரூ சதவிகிதம் ) 01.10.18 முதல் திருத்திய தொழில்வரி தொகை(ரூ) |
|---|---|---|---|
| 1 | 21000 வரை | இல்லை | |
| 2 | 21001 முதல் 30000 வரை | 122/- | 160/- |
| 3 | 30001 முதல் 45000 வரை | 310/- | 390/- |
| 4 | 45001 முதல் 60000 வரை | 610/- | 770/- |
| 5 | 60001 முதல் 75000 வரை | 920/- | 1150/- |
| 6 | 75001 மற்றும் அதற்கு மேல் | 1220/- | 1250/- |

<u>பொது குறிப்பு :</u>

- இந்நகராட்சி பொது மக்களுக்கு அடிப்படை தேவைகள் குடிநீர் விநியோகம், விளக்கு வசதி, சாலை வசதி தெருக்களை சுத்தப்படுத்துதல் மற்றும் இதர பொது சுகாதாரப்பணி நல்ல முறையில் அளித்து வருகிறது. அரசினால் வழங்கப்படும் கடன் உதவி தொகைகள், மான்ய தொகைகளை கொண்டு பொதுமக்களின் நலனுக்காக பணிகளை நல்ல முறையில் செய்து கொடுத்துள்ளது.
- நகராட்சி நிர்வாகம் செவ்வனே நடைபெற அவ்வப்போது தேவையான ஆலோசனை வழங்கிய நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-28 அவர்களுக்கும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களுக்கும் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அரியலூர் அவர்களுக்கும் எனது பணிவான நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன.
- நகராட்சியின் நிர்வாகம் பொதுவாக நல்லமுறையில் நடைபெற ஒத்துழைப்பை அளித்த பொறியாளர், மேலாளர், மற்றும் அனைத்து பணியாளர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுதலை தெரிவித்துக்கொள்வதுடன் எதிர்வரும் ஆண்டிலும் இந்நகராட்சி நிர்வாகம் நல்ல முறையில் இயங்கிட பூரண ஒத்துழைப்பு நல்கிடவேண்டும் என்ற எனது விருப்பத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

16/10/24

ஆணையாளர்
ஜெயங்கொண்டம் நகராட்சி.

16/10/2024